## IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR

## O.S. No. 244/2012

Deposition of **P.W.1** witnesses for Plaintiff / Defendant Solemnly affirmed by Tmt. A. Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 28.01.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : ரமேஷ் Father's Name : கோவிந்தன்

துவக்க நேரம்: 12.37 P.M

சாட்சி முன்னிலையானார், உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

.வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:

1. தாவா சொத்தை எனது அப்பா கோவிந்தன் ஒரு சித்தேஸ்வரன் என்பவரிடம் கிரயம் பெற்றதாக நான் சொல்கிறேன் என்றால் சரிதான். ஒரு அலமேலு அம்மாள் என்பவர் அறிவழகன், அன்பழகன் ஆகியோர்களுக்கு எதிராக அ.வ. எண். 151/1992 தாக்கல் செய்து அந்த வழக்கு அலமேலு அம்மாளுக்கு சாதகமாக தீர்ப்பானது என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

2. ஏற்கனவே அ.வ.எண்.151/1992-ல் கண்டுள்ள சொத்து, சித்தேஸ்வரனுக்கே உரிமையில்லை என்று தீர்ப்பாகியுள்ளது என்றாலும், அதனால் எனது அப்பா, சித்தேஸ்வரன் என்பவரிடம் கிரயம் பெற்றதும் செல்லாது என்றால் சரியல்ல. அ.வ.எண். 151/1992-ல் அவ்வழக்கு அலமேலு அம்மாள் என்பவருக்கு சாதகமாக தீர்ப்பான விவரம் எனக்கும், எனது அப்பாவிற்கும் நன்றாக தெரியும் என்றாலும், தற்பொழுது வழக்கிற்காக தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

3. அ.வ.எண்.151/1992-ற்கு எதிராக அன்பழகனும், அறிவழகனும் ஆத்தூர் சார்பு

நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு எண்.47/1997 தாக்கல் செய்து அந்த வழக்கும் அன்பழகனுக்கும், அறிவழகனுக்கும் எதிராக தள்ளுபடி செய்து தீர்ப்பானது என்றாலும், இந்த விவரமும் எனக்கு தெரியும் என்றாலும், வழக்கிற்காக மேல்முறையீட்டு உத்தரவை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

4. இவ்வழக்கில் பிரதிவாதிக்கு எதிராக இடைக்கால உத்தரவை பெற்றுள்ளேன் என்றால் சரிதான். இடைக்கால மனுவில் பிரதிவாதி பதில் தாக்கல் செய்து அதனுடன் மேற்படி அ.வ.எண்.151/1992 மேல்முறையீட்டு எண். 47/1997 ஆகியவற்றின் சான்றிட்ட நகல்கள் தாக்கல் செய்யப்பட்டு அந்த ஆவணங்களின் அடிப்படையில் பரிசீலித்து இடையீட்டு மனுவை இந்நீதிமன்றம் தள்ளுபடி செய்துவிட்டது என்றால் அதுகுறித்து உத்தரவு எனக்கு தெரியாது.

5. அ.வ.எண்.151/1992-ல் கண்டுள்ள அனைத்து சொத்துக்களும் அலமேலு அம்மாளுக்கு பாத்தியப்பட்டதாக தீர்ப்பாகியுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

ஆவணங்கள் பரிசீலிக்க வேண்டி குறுக்கு விசாரணை ஒத்தி வைக்க வேண்டுமென்று வேண்டுகோள் வைக்கப்பட்டது, வேண்டுகோள் ஏற்கப்பட்டு குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

முடிவு நேரம்: 12.58 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him / to be correct

Additional District Munsif, Attur

Typed by Tmt. L.Kalaiselvi - O.S. No.244/2012, Dt.28.01.2025.